DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.185/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | வைரன் (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Cast | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------25

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 18.11.2025**

நான் தற்போது நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டியில் குடியிருந்து காய்கறிவியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். (சாட்சி எதிரியை அடையாளம் காண்பித்தார்.)

எனக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையே ஏற்கனவே நிலம் தொடர்பாக பிரச்சனை இருந்து வருகிறது. 13.03.2025ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் நான் சந்தையில் இருந்தேன் சாட்சி - 5 தர்மலிங்கம் என்னை தொடர்புகொண்டு அஜர் எதிரி எனது மனைவி அ.சா..1 சித்ராவிடம் பஞ்சாயத்து பைப்பில் தண்ணீர் பிடிக்க கூடாது என்று சொல்லி பிரச்சனை செய்து கல்லால் எனது மனைவி அ.சா..1 சித்ராவை அடித்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் உடனே எனது வீட்டிற்கு வந்து பார்த்தபோது எனது மனைவி சித்ரா தலையில் ரத்த காயத்துடன் இருந்தார்.

நான் உடனே எனது மனைவி சித்ராவை எருமப்பட்டி காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றேன். போலிசார் சித்ராவை முதலில் மருத்துவமனைக்கு செல்லுமாறு கூறினார்கள். நானும் எனது மனைவி சித்ராவும் எருமப்பட்டி அரசு மருத்துவமனைக்கு

சென்றோம். பின்னர் மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் ஆம்புலன்ஸ் மூலம் நாமக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் எனது மனைவியை சிகிச்சையில் சேர்த்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் எனது மனைவியை எப்போது வீட்டிற்கு வந்து பார்த்தேன் என்றால் சம்பவத்தன்று மாலை 03.30 மணியளவில் வீட்டிற்கு வந்து பார்த்தேன். சம்பவத்தை எனக்கு சாட்சி - 5 தர்மலிங்கம் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். நான் எத்தனை மணிக்கு எனது மனைவி அ.சா.1 சித்ராவை நாமக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சம்பவத்தன்று மாலை சுமார் 07.00 மணி இருக்கும். நானும் எனது மனைவியும் நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு எப்படி சென்றோம் என்றால் நடந்தே சென்றோம்.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**